**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.2/2025 அதன் அ.வ.எண்.37/2025**

ரவிந்திரன், த/பெ.பாலு, இந்து, வயது 44, வசிப்பிட முகவரி கதவு எண்.4/81, நடுத்தெரு, வடக்கூர், கீழநத்தம் கிராமம், பாளையங்கோட்டை தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

... மனுதாரர் /வாதி

–எதிர்–

கண்ணையா, த/பெ.மூக்கன், இந்து, வயது 62, வசிப்பிட முகவரி கதவு எண்.4/80, நடுத்தெரு, கீழநத்தம், வடக்கூர், பாளையங்கோட்டை தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனுவானது, 2 ம் தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அதன் இயற்கை தன்மைகள் மற்றும் அதில் உள்ள ஆக்கிரமிப்புகளை குறித்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151 சி.பி.சி ன் பிரகாரம் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள்; 23.01.2025.

இம்மனு என்முன்பாக 14.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.மோகன்ராஜ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவாணை**

1) இம்மனுவானது வழக்கறிஞர் / நீதிமன்ற ஆணையர் திரு. பேச்சிமுத்து,

M.S.No. 6271/2022 நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் மனு 2ம் தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு ஆக்கிரமிப்புகள் மற்றும் இயற்கை அமைப்புகள் குறித்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். நீதிமன்ற ஆணையருக்கு ஊதியமாக ரூ.8,000/– நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி ஊதியத்தை மனுதாரர் தரப்பில் நேரடியாக 02.01.2026ம் தேதியோ அல்லது அதற்கு முன்போ நீதிமன்ற ஆணையரிடம் வழங்க வேண்டும். வழக்கறிஞர் ஆணையர் இரு தரப்பிற்கும் உரிய அறிவிப்பு கொடுத்து பின் 2ம் தபசில் சொத்தையும் அதன் அமைப்புகளையும் பார்வையிட்டு அளந்து வரைபடத்துடன் 20.01.2026ம் தேதியோ அல்லது அதற்கு முன்போ அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

<u>1வது தபசில்</u>

பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், பாளையங்கோட்டை இணை 1 சார்பதிவாளர் சரகம், பாளையங்கோட்டை தாலுகா, கீழநத்தம் கிராமம், வடக்கூர் பழைய நத்தம் சர்வே எண்.433/1ஏ1 தற்போது புதிய நத்தம் சர்வே எண்.908/8 உள்ள மனைக்கு ஏர்ஸ் 1.01 அளவுள்ள மனைக்கு செண்ட் 2.49க்கு சதுர அடி 1086.59 சதுர மீட்டர் 101 அளவுள்ள மனையும் அதைச் சார்ந்த சகல மாமூல் பாத்தியங்கள் உள்பட இதற்கு எல்கை.

வடக்கே – மூக்காண்டி காலி மனை

கிழக்கே – செல்லையா காலி மனை

தெற்கே – கிழமேல் தெரு

மேற்கே – மூக்காண்டி வீடு

இந்த நான்கு எல்கைக்குள்பட்ட சதுர மீட்டர் 101 விஸ்தீரணமுள்ள மனையும், மேற்படி மனையில் கட்டப்பட்டுள்ள அடித்தளம் கிழமேல் 24.75 அடியும், தென்வடல் 41 அடியும் உள்ள அளவுக்கு ச.அ.1014.75 ச.மீ 94.30 அளவில் கட்டியிருக்கிற வீடும் அதில் ஏற்பட்டுள்ள கதவு எண்.4/81 உள்ள வீடும் அதைச் சேர்ந்த சகல கட்டிடமும், கட்டிட சாமான்களும், அனைத்து மேல்கோப்பு

வகையறாக்களும், வீட்டு வரிவிதிப்பு எண்.351(24.01.2024) மற்றும் மின் இணைப்பு எண்.07–094–009–58 உள்பட மேற்படி மனை வீட்டைச் சேர்ந்த சகல மாமூல் பாத்திய சம்பந்த சுதந்திர உரிமைகள் அனைத்தும் உள்பட தபசில் விபரம் சரி.

In the rough plan the plaint 1st Schedule property is shown as ABCD.

**2 வது தபசில்**

பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், பாளையங்கோட்டை இணை 1 சார்பதிவாளர் சரகம், பாளையங்கோட்டை தாலுகா, கீழநத்தம் கிராமம், வடக்கூர் பழைய நத்தம் சர்வே எண்.433/1ஏ1 தற்போது புதிய நத்தம் சர்வே எண்.908/8 உள்ள மனையில் கிழமேல் 1 1/2 அடி, தென்வடல் 41 அடி, மொத்தம் 61.5 சதுர அடி, 1 சதுர அடி வழிகாட்டி மதிப்பு ரூ.418, 61.5 சதுர அடி மதிப்பு ரூ.25707.

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Decree uploaded on 02.01.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.01.02 12:57:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.2/2025 அதன்</u>**
**<u>அ.வ.எண்.37/2025</u>**

உத்தரவாணை
19.12.2025.